## திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2020

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3119 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 3120 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் 4.04(அ) பிரிவின் IV ஆம் உறுப்புரை மற்றும் 2018 மே 11 ஆந் திகதிய 3650 எஸ்ஆர்ஐ (சீஓஎல்) மற்றும் 3651 எஸ்ஆர்ஐ மேலதிக நிதி உடன்படிக்கைகள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் 10 அமுல்ப்படுத்தல் முகவர்கள் காணப்படுகின்றனர். 2020 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் சந்தை கேள்வியை எதிர்கொள்வதற்கு வினைத்திறனான திறன்கள் கல்வி முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புக்கள் என்பவற்றிற்கான தரம், பொருத்தத்தன்மை, நுழைவு, இனங்காணல் என்பவற்றை மேம்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் பெறுபேறுகள் அடிப்படையிலான கடனளிப்பு முறை மூலக்கூறின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 141,524.23 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 1,061.2 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதில் ரூபா 28,708.23 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் மற்றும் ரூபா 13,100 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் முறையே ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. ஐ.அ.டொலர் 761.2 மில்லியன் மிகுதி தொகை ஜேர்மன் அரசாங்கம், கொரியாவின் எக்ஸிம் வங்கி ஏனையவர்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2014 செப்தெம்பரில் ஆரம்பித்திருந்ததுடன் 2021 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றானது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 11 முகவர்களின் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்களுடன் இணங்கி நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றை 11 முகவர்களின் நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்று விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை மொத்த செலவின ஒருங்கிணைந்த கூற்று பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் பெறுகைகளின் கீழ் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய 9 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் கீழான 51 நடவடிக்கைகளில் 18 நடவடிக்கைகளின் இலக்குகள் மீளாய்வாண்டில் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஏடிபீ கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அனைத்து பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளினதும் இலக்கை அடைந்துகொள்வதை பூர்த்தி செய்தல் தினம் 2021 யூன் 30 அன்றாகும். தாமதங்கள் பிரதானமாக கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழில்துறை மூடப்படுதல் மற்றும் பகுதியளவில் செயற்படுதல் காரணமாக ஏற்பட்டிருந்தன. | ஏடிபீ கடன் உடன்படிக்கைகளின் கீழான DLIs இன் மிகுதி செயற்பாடுகள் தொடர்பாக இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆசிய அபிவிருத்தி வங்கியின் 3650 மற்றும் 3651 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் ஐ.அ.டொலர் 100,000,000 மீளாய்வாண்டின் இறுதியளவில் பணவளிப்பு செய்யப்படுவதற்கு இலக்கிடப்பட்ட போதிலும் ஐ.அ.டொலர் 36,280,000 கூட்டுமொத்தம் பணவளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறித்த ஏடிபீ கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் ஐ.அ.டொலர் 100 மில்லியன் மொத்த பணவளிப்பு 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | நிதிகளை பயன்படுத்துவதில் வினைத்திறனின்மையை இது காட்டுவதால் நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய இளைஞர் சேவைகள் கழகத்தின் திறன்கள் துறை அபிவிருத்தி நிதியத்தின் கீழ் ரூபா 84,216,614 கிரயத்தை கொண்டிருந்த இரண்டு செயற்திட்டங்கள் ஒப்பந்ததாரரால் பூர்த்தி செய்வதிலுள்ள தாமதம் காரணமாக 2018 ஆகஸ்ட்டிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தன. | ஒப்பந்ததாரரின் தாமதங்கள் காரணமாக தம்புள்ள பயிற்சி நிலையத்தின் புனரமைப்பு வேலை மற்றும் திருகோணமலை பயிற்சி நிலையக் கட்டிடத்தின் அபிவிருத்தி ஆகிய ஒப்பந்தங்களை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் வேலையானது திறைசேரி நிதிகள் மூலம் தொடரப்பட்டு வருகின்றன. | நிர்மாண வேலையை பூர்த்தி செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. |
| (ஆ) | செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் தேசிய பயிலுநர் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 4 பயிற்சி நிலையங்களின் மேம்படுத்தல் வேலை 2019 நவம்பர் மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் மேம்படுத்தல் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவானது தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிர்மாணித்து நவீனமயப்படுத்துவதற்கு இனங்காணப்படுகின்ற பயிற்சி நிலையங்களின் சிவில் வேலைகளை துரிதப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | இரத்மலானையிலுள்ள புதிய கட்டிடத்தின் நிர்மாணங்களிற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2014 ஆகஸ்ட் 5 இல் வழங்கப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. தாமதமான காலப்பகுதி 5 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருந்ததுடன் நிர்மாணக் கிரயம் ரூபா 200 மில்லியன் தொகையாக காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆகஸ்ட் மாதத்தில் பூர்த்தி செய்வதற்காக பட்டியலிடப்பட்ட போதிலும் 2020 | வீரீஏ இரத்மலானை கட்டிடத்தின் நிர்மாணம் bio bubble concept இன் கீழ் மெதுவாக முன்னேற்றமடைந்து வருகின்ற போதிலும் பௌதீக செயன்முன்னேற்றம் வேலை நோக்கெல்லையின் 95% ஆக உள்ளது. மிகுதி வேலை 2021 ஒக்தோபரில் பூர்த்தி செய்யப்படும். | நிர்மாண வேலைகளை துரிதப்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 60 சதவீதம் மாத்திரமேயாகும்.

## 2.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) தேசிய இளைஞர் சேவைகள் கழகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தொழில்சார் விசேட திறன்கள் மற்றும் தொழில்துறை தேவைப்பாடுகளை தேடும் மாணவர்களிற்காக பல நுழைவு மற்றும் வெளியேற்றத்தை செயற்படுத்த நெகிழ்வான விநியோகத்தை ஊக்குவிப்பதற்கு ரூபா 1 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி நிலையங்கள் விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டதுடன் நிலவிய கொவிட்-19 தொற்றுநோய்க்கு ஏற்ப மாணவர்கள் பங்குபற்றாதமை காரணமாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றியளிக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட விளைவை அடைந்துகொள்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |
| (ஆ) தேசிய இளைஞர் சேவைகள் கழகத்தின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள நான்கு பயிற்சி நிலையங்களில் ஐந்து பயிற்சி கற்கைநெறிகளிற்காக மேலதிக பௌதீக வளங்கள் மற்றும் குழுக்களை இனங்காண்பதற்கு ரூபா 4 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது பௌதீக வளங்கள் மற்றும் குழுக்கள் இனங்காணப்பட முடியாதிருந்தன. | மொனராகலை பயிற்சி நிலையம் - இப் பயிற்சி நிலையத்தில் நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டு வருவதனாலும் நிர்மாண வேலையிலுள்ள தாமதம் காரணமாகவும் உபகரணங்களை கொள்வனவு செய்ய முடியாதிருந்தன.<br>ஹொரவ்பதன பயிற்சி நிலையம் - எஸ்எஸ்டிபி நிதிகள் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காததால் பாதீட்டு மட்டுப்படுத்தல்கள் காரணமாக தேவையான கட்டிட புனரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட முடியாதிருந்தன.<br>ஒருபந்திவெவ பயிற்சி நிலையம் - இயந்திரவியல் கற்கைநெறி நிறுவன நிதிகளுடன் தரமுயர்த்தப்பட்டுள்ளது.<br>உலப்பனே பயிற்சி நிலையம் - | உரிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | நவீனமயப்படுத்தல் வேலை சனவரி மாதத்தில் முன்மொழியப்பட்டிருந்த போதிலும் புதிய முகாமைத்துவத்தால் உருவாக்கப்பட்ட முழுமையான பகுத்தறிவு திட்டத்தில் கற்கைநெறிகள் மீண்டும் பட்டியலிடப்பட்டன. | |
| (இ) | ரூபா 757 மில்லியன் மதிப்பிடப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் திறன்கள் துறை நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியேற்பாடுகளின் கீழ் சிலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தால் நிர்மாணிக்கப்பட்ட மாணவர் விடுதி 2020 ஒக்தோபர் 30 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 65 சதவீதமாக காணப்பட்டது. | bio-bubble concept இன் கீழ் மாணவர் விடுதி கட்டிட நிர்மாணம் முன்னேற்றமடைந்து வருகின்றதுடன் தற்போது பௌதீக செயன்முன்னேற்றம் 70% ஆக உள்ளது. | ஒப்பந்ததாரருக்கு ஒதுக்கப்பட்ட வேலையின் தொடர்ச்சியான மேற்பார்வை தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |
| (ஈ) | தர முகாமைத்துவ முறைமையை மேலும் மேம்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டில் தர மேம்பாட்டு முறைமைகள் (கியூஐஎஸ்) அறிமுகப்படுத்தப்பட்டது. சிலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் மீளாய்வாண்டின் இறுதி வரை முறைமைகளை நிறுவி தர உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | பதவியணி பற்றாக்குறை காரணமாக பயிற்சி அளிப்பவர்கள் உள்ளக மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு முழுநேரமும் செலவிடுகின்றனர். தர மேம்பாட்டு முறைமையானது நீண்டகால எண்ணக்கரு ஒன்றானதுடன் இது படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். உலகளாவிய தொற்றுநோயின் தாக்கம் செயன்முறையை மேலும் தாமதப்படுத்தியிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (உ) | நிகழ்ச்சித்திட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது சிலோன் ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தில் சித்தியடைந்திருந்த மாணவர்களின் தொழில்வாய்ப்பு தரவு சேகரிப்பு விகிதம் 35 சதவீதமாக காணப்பட்டது. | பின்வருவனவற்றால் குறைந்த தரவுசேகரிப்பு விகிதம் காணப்படுகின்றது. முகவரி மாற்றம், தொடர்பு இலக்க மாற்றம் அல்லது நாட்டைவிட்டு வெளியேறுதல் காரணமாக மாணவர்களை கண்டறிவதிலுள்ள சிக்கல் தன்மை. சீஜீரீஜ எதிர்கால கம்பனிகளிற்கு சித்தியெய்தும் | தரவை சேகரிப்பதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மாணவர்களின் விபரங்களை வழங்கி அவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதும் சீஜீரீரீஜ இற்கு விபரங்களை வழங்குமாறு தொழில்தருநரை கோருகின்ற போதிலும் தொழில்தருநரின் மோசமான பதில் சீஜீரீரீஜ இற்கு உண்மையான தரவுகளை பெற்றுத்தருவதில்லை. சீஜீரீரீஜ வேலைவாய்ப்பு விகிதத்தை 95% இல் பேணுகின்றது என உறுதிப்படுத்துகின்றது. | |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது ஊழியர் இணைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக (ஈஎல்ரீபி) ரூபா 69.43 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டிற்காக பயிற்சி உடன்படிக்கைகள் எதுவும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. இலக்கிடப்பட்டவாறு 2000 மேலதிக பயிற்சியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பத்தில் 2020 ஆண்டின் போது 2000 ஒப்பந்தங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டது. பெறுகை செயன்முறை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கத்தால் நாடு 3 மாதங்களிற்கு மேலாக முடக்கப்பட்டதுடன் ஆண்டு முழுவதும் பயிற்சி நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் எஸ்எஸ்டிபி அதன் நடவடிக்கைகளை 2021.06.30 அளவில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. கொவிட்-19 தொற்றுநோயினால் நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன. ஆகையால் பெறுகை அதன் இறுதிக் கட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டது. | நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டும். |
| (எ) | தொழில்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பதவியணியினரின் திறன்களை மேம்படுத்தி சான்றளிக்கப்பட்டவர்களின் திறன் இடைவெளியை குறைக்கும் நோக்கத்துடன் நெகிழ்வான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 13.889 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 0.0195 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் | இலக்குகளில் பின்தங்கியதற்கான பிரதான காரணங்கள் தொழில்துறையில் எதிர்மறையான தாக்கம் மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் (அரச மற்றும் தனியார்) மூடப்பட்டமை என்பனவாகும். மேலும் பெரும்பாலான தொழில்துறைகள் தற்போதைய நிலைமையின் கீழ் அவர்களது பணியாளர்களின் திறனை தரமுயர்த்துவதில் முதலீடு செய்ய தயாராக | எதிர்பார்க்கப்பட்ட விளைவை அடைந்துகொள்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்துறையில் திறன்களை தரமுயர்த்தும் நெகிழ்வான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஆகக்குறைந்தது 2000 மேலதிக பணியாளர்கள் பங்குபற்றும் இலக்கையும் அடைந்துகொள்ள தவறியிருந்தது. | இல்லை. ஆகையால் திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளுதல் மிகவும் கடினமாக உள்ளதால் பாதீட்டு ஒதுக்கீடு கிட்டத்தட்ட பயன்படுத்தப்படாமல் உள்ளது. | |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதியளவில் புதிய மேம்படுத்தப்பட்ட கியூஜஎஸ் இல் சான்றுறுதிப்படுத்தப்பட்ட ஆகக்குறைந்தது 300 நிலையங்களை நிறுவுவதற்கு இலக்கிடப்பட்ட போதிலும் 232 நிலையங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் கியூஜஎஸ் இல் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்தன. அத்துடன் பயிற்சி நிலையங்களின் தரக் கட்டுப்பாட்டை மேம்படுத்துவதற்கு ஆகக்குறைந்தது 200 தர தூதுவர்கள் (quality ambassadors) பயிற்றுவிக்கப்பட்டு நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 106 பேர் மாத்திரமே நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | தர மேம்பாட்டு முறைமைகள் கொரோனா தொற்றுநோய் காரணமாக 2020 சனவரியிலிருந்து பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பயிற்சி நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. ஆகையால் பயிற்சி நிலையங்களில் நிறுவப்பட்ட கியூஜஎஸ் முறைமைகளிற்கும் தர தூதுவர்களின் நியமனத்திற்கும் அவசியமான கட்டாய கள விஜயங்களை எங்களால் ஒழுங்கு செய்ய முடியாதிருந்தது. | பயிற்சி தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான மற்றும் quailed தூதுவரை நியமனம் செய்தல். |